

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் ஹாக்கி இந்தியா இணைந்து நடத்தும் 14ஆவது ஆடவர் ஹாக்கி இளையோர் உலகக் கோப்பை போட்டிகள் நடைபெற உள்ள 9.47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சர்வதேச தரத்திலான செயற்கை புல்வெளியுடன் புதுப்பிக்கப்பட்ட மதுரை வளைகோல் பந்து (ஹாக்கி) மைதானத்தை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் பி.மூர்த்தி, முனைவர் பழனிவேல் தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, ஆ.வெங்கடேசன், மு.பூமிநாதன், கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா மற்றும் அதிகாரிகள் உடன் உள்ளனர்.



தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் ஹாக்கி இந்தியா இணைந்து நடத்தும் 14ஆவது ஆடவர் ஹாக்கி இளையோர் உலகக் கோப்பை போட்டிகள் நடைபெற உள்ள சர்வதேச தரத்திலான செயற்கை புல்வெளியுடன் புதுப்பிக்கப்பட்ட வளைகோல் பந்து (ஹாக்கி) மைதானத்தை திறந்து வைத்த நிகழ்ச்சியையொட்டி நடைபெற்ற காட்சிப்போட்டியில் விளையாடிய வீரர்கள் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

### உலகக் கோப்பையை வென்ற - பார்வையற்ற

# மகளிர் கிரிக்கெட் அணிக்கு வாழ்த்துகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!

சென்னை, நவ. 24

பார்வையற்றோருக்கான டி20 உலகக் கோப்பை வென்ற இந்திய கிரிக்கெட் வீராங்கனைகளுக்கு வாழ்த்து தெரிவித்து, முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**துணிவு வழிநடத்தும்போது வரலாறு உருவாகிறது!**

**முதல் டி20 உலகக் கோப்பையை வென்ற சிறப்பான நமது மகளிர் பார்வையற்றோர் கிரிக்கெட் அணிக்கு நெஞ்சார்ந்த வாழ்த்துகள்.**

**நீங்கள் இந்தியாவின் பெருமையாகவும், உலகிற்கு ஒரு எடுத்துக்காட்டாகவும் உயர்ந்து நிற்கிறீர்கள்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### தென் மாவட்டங்களில் கனமழை எதிரொலி

# முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்கு அறிவுறுத்தல்!

## தமிழ்நாடு அரசு நடவடிக்கை!

சென்னை, நவ. 24 -

தென்மேற்கு வங்கக்கடல்பகுதியில் நிலவும் மேலடுக்கு காற்று சுழற்சி காரணமாக தூத்துக்குடி, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய இடங்களில் இன்று மிக கனமழை பெய்யக்கூடும் எனவே அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு மாவட்ட நிருவாகத்திற்கு அறிவுறுத்தல்.

தெற்கு இலங்கைக்கு அருகிலுள்ள தென்மேற்கு வங்கக்கடல்பகுதிகளில் நிலவும் மேலடுக்கு காற்று சுழற்சி காரணமாக இன்றும் தமிழ்நாடு முழுவதும் பரவலாக மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக, தென்காசி, திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய இடங்களில் இன்று மிககனமழை பெய்யக்கூடும் என இந்திய வானிலை மையம் எச்சரித்துள்ளது.

கடலூர், அரியலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, சிவகங்கை, மதுரை, விருதுநகர், ராமநாதபுரம், மற்றும் அதை ஒட்டிய பகுதிகளில் மிதமானது முதல் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

மிககனமழை மற்றும் கனமழை எச்சரிக்கை அளிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ் நாடு அரசு உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்களை அறிவுறுத்தியுள்ளது.

மேலும், தமிழ்நாடு பேரிடர் மீட்பு படையின் இரண்டு அணியினர் தூத்துக்குடி மாவட்டத்திலும், ஒரு அணி திருநெல்வேலி மாவட்டத்திலும் மீட்பு மற்றும் நிவாரண பணிக்காக முன்னெச்சரிக்கையாக நிலை நிறுத்தப்பட்டுள்ளனர்.

கனமழை எச்சரிக்கை வரப்பெற்றுள்ளதால், மாநில அவசர கால செயல்பாட்டு மையம் மூலம் நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

### சென்னை கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் - வழக்கறிஞர்

# உ.விஜயபோஸ் இல்லத் திருமண வரவேற்பு! அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில்!

## அமைச்சர்கள் சா.சி.சிவசங்கர் – சிவ.வீ. மெய்யநாதன் – மேயர் பிரியா – தயாநிதிமாறன் எம்.பி.– என்.ஆர்.இளங்கோ எம்.பி. – முன்னணியினர் வாழ்த்துரை!

சென்னை, நவ.24-

சென்னை கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் புரசைவாக்கம் வழக்கறிஞர் உ.விஜயபோஸ் - சுலோச்சனா ஆகியோரின் புதல்வி வி.அனிதா மகாளுக்கும். சென்னை பெரம்பூரைச் சேர்ந்த ஜோசப் தேவகுமாரி - ஜோ.அனிதா ஆகியோரின் புதல்வர் ஜெ.டேவிட் சாலமனுக்கும் திருமண வரவேற்பு விழா 1.12.2025 - திங்கள் கிழமை இரவு 7 மணியளவில் கீழ்ப்பாக்கம் (சி.எஸ்.ஐ. பெய்ன்ஸ் பள்ளி) கெல்லீஸ் சி.எஸ்.ஐ. லைட்டி அரங்கத்தில் நடைபெறுகிறது.

இம்மண விழாவில் ஆர்.எம்.ரங்கநாதன், சி.சேகர், புரசை ஜி.தாமோதரன், ந. கலையரசன் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

சொ.வேலு, வி.சுதாகர், புனிதவதி எத்திராசன், பரிதி இளம்சுருதி, ராஜேஸ்வரி ஸ்ரீதர், எல்.சுந்தர்ராஜன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம்மண விழாவினை சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகின்றார்.

இம்மண விழாவில் போக்குவரத்து (ம) மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சி.வி.மெய்யநாதன், மேயர் பிரியா ராஜன், தயாநிதிமாறன் எம்.பி., என்.ஆர்.இளங்கோவன் எம்.பி., சி.பெர்னாண்டஸ் ரத்தின ராஜா, ப.தயாகம்கவி எம்.எல்.ஏ., அ.வெற்றியழகன் எம்.எல்.ஏ., இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ., ப. ரங்கநாதன், கே.எஸ்.ரவிச்சந்திரன், கே.சந்துரு, தமிழன்பிரசன்னா, பி.கே.மூர்த்தி, கே.எஸ்.எம். நாதன், எம்.விஜயகுமார், பி.ஸ்ரீராமுலு, சரிதா மகேஷ்குமார், கூ.பீ.ஜெயின், வானவில் விஜய், கோ.ஏகப்பன், தேவஜவகர், ஜி.எம். தேவன், இசட்.ஆசாத், வே.உமாகாந்த், கோ.மணி, க.நந்திஸ்வரன், ஆர்.நிர்மலா தேவி, சாவித்திரி வீரராகவன், தி.வி.செம்மொழி, ஐ.சி.எப். வ.முரளிதரன், எ.நாகராஜன், செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, டி.எஸ்.பி.இராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜன், எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர், எம்.தில்லைகுமார், பி.சி.சம்பத்குமார், ஜெ.கே.கருணாகரன், கே.வள்ளி, ப. சுப்புராயலு, எஸ்.ரசூல், டி. வி.வேலு, எம்.மலர்மாறன், கே.அன்ன புரணி, எஸ்.ஜெகதீசன், வி.அயாய், தி.தயாளன், சு.மனோகரன், ந.பாலு, வி.விஜயகுமார், ஆர்.பாபு, இ.மொய்தீன், டாயிர் எஸ். அரி, வான்மதி, கதிரவன் உள்ளிட்ட பலர் பங்கேற்று வாழ்த்துகின்றனர்.



புதுச்சேரி மாநிலம், நெட்டப்பாக்கம் தொகுதிக்கு உட்பட்ட கல்மண்டபம் கிராமத்தில் முன்னாள் தி.மு.க. எம்.பி., ஆறுமுகம் இல்லத்தில் இருந்து தி.மு.க. உறுப்பினர் சேர்க்கையை எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. தொடங்கி வைத்தார். உடன் மாநில அமைப்பாளர் இரா. சிவா எம்.எல்.ஏ. உள்ளார்.

### கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் சார்பில்

# சிறுபான்மையினர் போற்றும் இளைஞர் எழுச்சி நாள் விழா!

## செயலாளர் டாக்டர்.அ. சுபேர்கான் அறிவிப்பு!

சென்னை, நவ. 24-

நவ.27 இளைஞர் எழுச்சி நாளையொட்டி ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா. இன்று மாலை 4 மணியளவில் இராயப்பேட்டை புதுக்கல்லூரியில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவுச் செயலாளர் டாக்டர்.அ. சுபேர்கான் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் முனைவர். அன்பில் மகேஷ்பொய்யாமொழி அவர்கள், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி. சா.மு.நாசர்அவர்கள், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.தயாநிதி மாறன் மற்றும் சென்னை மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் நே.சிற்றரசு ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்ற உள்ளனர்.

மேலும் இந்நிகழ்வில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் தலைவர் டி. பி.எம்.மைதீன்கான், துணைத்தலைவர் ஜோசப்ராஜ், இணைச் செயலாளர் ஜெரால்டு, துணைச் செயலாளர்கள் இரா.அன்வர்கான், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, அடையாறு ஷபீல் கான், முனவர் ஜான், எம்.நூருல்லா, வீ.விஜயகுமார், ரபி அகமது, அன்வர் அலி, சாகுல் அமீது, எஸ்.டி.ஆர்.பொன்சீலன், ராபர்ட் @ராஜதுரை, இராஜேஷ் ஜெயின் மற்றும் திருவல்லிக்கேணி பகுதி கழகச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், சேப்பாக்கம் பகுதி கழகச் செயலாளர் எஸ். மதன்மோகன், 115வது வட்ட கழகச் செயலாளர் ஜி.வெங்கடேஷ், 115 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஈஸ்வரி வேங்கடசன் மற்றும் சிறு பான்மையின மாணவ மாணவிகள், உலமாக்கள் மற்றும் தேவாலய உபதேசியார்களுடன் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாவட்ட, மாநகர, பகுதி, நகரம் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகளும் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

# வேளச்சேரி மேற்குப் பகுதிக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## பகுதிப் பொறுப்பாளர் வே.ஆனந்தம் எம்.சி. அறிவிப்பு!

சென்னை, நவ. 24

வேளச்சேரி மேற்கு பகுதிக் கழகப் பொறுப்பாளர் வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி மேற்குப் பகுதிக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் பகுதி அவைத் தலைவர் சி.பழனி தலைமையில் இன்று (24.11.2025 திங்கட்கிழமை) மாலை 6 மணியளவில், வேளச்சேரி, சிறுவர் விளையாட்டு பூங்கா, விஜயநகர், 1 வது மெயின் ரோட்டில் உள்ள பகுதிக் கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் பகுதிக் குட்பட்ட மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பா ளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் மற்றும் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்கும் மாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

நவம்பர் 27 இளைஞர் எழுச்சி நாள் விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு வேளச்சேரி மேற்குப் பகுதிக் கழகப் பொறுப்பாளர் வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



சென்னை கிழக்கு மாவட்டம் எழும்பூர் தெற்கு பகுதி திமுக இளைஞரணி சார்பில் அமைச்சர், மாவட்டச் செயலாளர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில், பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் இ.சூர்யா தலைமையில் நடைபெற்ற விழாவில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பில் வசித்த 1085 குடும்பங்களுக்கு அமைச்சர் மனோ தங்கராஜ் , முக்குலத்தோர் புலிப்படை தலைவர் நடிகர் கருணாஸ் ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினர். உடன் மேயர் பிரியா ராஜன், தாயகம் கவி எம்.எல்.ஏ.,வி.சுதாகர், சொ.வேலு எம்.சி. எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி, கே.எஸ்.ரவிசாசந்திரன், தமிழன் பிரசன்னா கோ.ஏகப்பன், புனிதவதி எத்திராசன், இசட்.ஆசாத், வானவில் விஜய் ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி., மற்றும் கழக நிர்வாகிகள், முன்னோடிகள், செயல் வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

